*கவனிக்க.-2021.06.25 ஆந் திகதிய 2234ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : III பகுதி II பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2235 - 2021 ජූලි මස 02 වැනි සිකුරාදා - 2021.07.02

*2235 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1394 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1399 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1396 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1398 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூலை மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூலை மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1393- B 082245 - 405 (2021/07)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**

***மின்சக்தி அமைச்சு***

*இலங்கை மின்சார சபை*

*சர்வதேச போட்டிக்குரிய கேள்வி அறிவித்தல் ( ICB)*

*நிர்மாணித்தல், வைத்திருத்தல், இயக்குதல் மற்றும் கைமாற்றுதல் அடிப்படையில் கெரவலப்பிட்டியவில் 300 MW இரண்டாவது LNG இணைந்த சுற்று சக்திவலு உற்பத்தி வசதியினை அபிவிருத்தி செய்தல்*

எமது இல.: CEB/ AGM( TR) / DGM(PPD) / LNG2-2020

*கேள்விகளை ஒப்படைப்பதற்கான இறுதித் திகதி: 2021. 09.13, 11. 00 மணிக்கு.*

*01. மின்சக்தி அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு சார்பாக இலங்கை மின்சார சபையானது பிரேரிக்கப்பட்டுள்ள 220 KV கெரவலப்பிட்டிய உப மின நிலையத்துடன் இணைக்கப்படவுள்ள நிர்மாணித்தல், வைத்திருத்தல், இயக்குதல் மற்றும் கைமாற்றுதல் (BOOT) அடிப்படையில் கெரவலப்பிட்டியவில் 300 MW இரண்டாவது LNG இணைந்த சுற்று சக்திவலு உற்பத்தி வசதியினை அபிவிருத்தி செய்வதற்கு விருப்பமுள்ள மனுதாரர்களிடமிருந்து கேள்வி மனுக்களைக் கோருகின்றது.*

*02. வெற்றிகரமான செயற்றிட்ட முன்வைப்பாளர் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்.-*

- *இணைந்த சுற்று மின்னுற்பத்தி நிலையத்தினை வடிவமைத்தல், நிதி முதலீடு, பெறுகை, நிர்மாணித்தல், ஆரம்பித்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் 25 வருட இயக்குதல் நிறைவுக்கு பின்னர் கைமாற்றுதல்.*
- *இமிச இனால் வழங்கப்பட்ட எல்லைகள் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணியினுள் செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்தல்.*
- *மின்மாற்றிகள், உற்பத்திப் பகுதியிலிருந்து உப மின்னிலையம் வரையிலான பாதுகாப்பு மற்றும் மானிப்பொருத்துதல் போன்ற செலவுகள் உட்பட, பிரேரிக்கப்பட்டுள்ள 220 KV கெரவலப்பிட்டிய உப மின் நிலையத்துடன் மின்னுற்பத்தி நிலையத்தினை இணைப்பதற்கான செலவினை ஏற்றுக் கொள்ளல்.*
- *அனைத்து சூழல் அனுமதிகள் , அரசாங்க அனுமதிகள் மற்றும் சட்டரீதியான அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளல்.*
- *மேற்சொன்ன மின்னுற்பத்தி நிலையத்திற்காக இலங்கை மின்சார சபையுடன் மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்ளல், மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையின் காலம் இணைந்த மின்னிலையம் இயங்கத் தொடங்கிய திகதியிலிருந்து 25 வருடங்கள் ஆகும்.*

*03. ஆறு பதிப்புகளைக் கொண்ட RFP ஆவணத்தினை, ஆர்வமுள்ள மனுதாரர்கள் பிரதி பொது முகாமையாளர் ( தனியார் சக்தி வலு அபிவிருத்தி) அலுவலகத்திலிருந்து கீழே விடயம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து மு.ப. 9.00 மணி தொடக்கம் 15.00 மணிக்கிடையில் அலுவலக நாட்களில் கேள்விமனு கோரல் முடிவுத் திகதிக்கு முப்பது (30) நாட்களுக்கு முன் வரையில் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு 2, இலங்கை எனும் முகவரிக்கு எழுதப்பட்ட மீளச்செலுத்தப்படாத ரூபா 400,000.00 க்கான வரைவு அல்லது பணத்தைக் கொடுத்து கொள்ளவனவு செய்யலாம்.*

*RFP ஆவணத்தினை கூரியர் மூலமாக பெற்றுக்கொள்ள தேவையேற்படின், இலங்கை மின்சார சபை, கொழும்பு 2, இலங்கை எனும் முகவரிக்கு எழுதப்பட்ட மீளச் செலுத்தப்படாத ரூபா 400,000.00 க்கான (உள்ளூர் விநியோகத்திற்கு மட்டும்) வங்கி வரைவு உள்ளடங்கிய எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை ஆர்வமுள்ள மனுதாரர்கள் விடயம் 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஆவணங்கள் தொலைந்து போவதற்கும் தாமதமாக கிடைப்பதற்கும் பொறுப்பேற்கப்படாது.*

*வெளிநாடுகளிலுள்ள எந்தவொரு ஆர்வமுள்ள மனுதாரரும், REP ஆவணத்தினை கூரியர் மூலமாக பெற்றுக்கொள்ள தேவையேற்படின், இமிச இன் சர்வதேச கணக்கிற்கு மீளச்செலுத்தப்படாத 2, 300.00 அமெரிக்க டொலருக்கான வங்கி வரைவு உள்ளடங்கிய விண்ணப்பம் ஒன்றை DGM (PPD) க்கு dgmppd tr@ ceb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். இமிச யின் கணக்கிற்கு பணம் கிடைத்தது உறுதிசெய்யப்பட்டவுடன் RFP ஆவணமானது கூரியர் ஊடாக அனுப்பிவைக்கப்படும். ஆவணங்கள் தொலைந்து போவதற்கும் தாமாக கிடைப்பதற்கும் பொறுப்பேற்றப்படாது.*

* பெறுநர்: பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை.
* முகவரி: 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை.
* கணக்கு இல.: 204100130085135.
* SWIFT Code: PSBKLKLX023.
* வங்கயின் பெயர்: மக்கள் வங்கி, தலைமையக கிளை.
* வங்கியின் முகவரி: 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை.
* எனது இல.: CEB/ AGM( TR) / DGM(PPD) / LNG2-2020.

04. REP ஆவணங்கள் CEB இணையத்தளத்தில் ஆய்விற்காக காணப்படுகின்றது. http//www.ceb.lk

05. மேலதிக விபரங்களுக்காகவும் RFP ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கவும், அல்லது RFP ஆவணத்தை கொள்வனவு செய்யவும், ஆர்வமுள்ள செயற்றிட்ட முன்வைப்பாளர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதி பொது முகாமையாளர்,
தனியார் மின்சக்தி அபிவிருத்தி கிளை,
இலங்கை மின்சார சபை,
2 ஆம் மாடி, G.O.B.A கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை.
தொ.பே./தொ.ந. + 94112338249
மின்னஞ்சல்: dgmppd tr@ ceb.lk

06. RFP ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கீழுள்ள முகவரிக்கு ஒப்படைக்கப்படலாம்.

தலைவர், CANC , மின்சக்தி அமைச்சு,
C/O, மேலதிக பொது முகாமையாளர், (மின்கடத்தல்), இலங்கை மின்சார சபை,
இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை.

கேள்விப்பத்திரங்கள் RFP இன் பதிப்பு I இல் உள்ள சரத்து 3.20 க்கு ஏற்ப 2021.09.13 ( கேள்விமனுகோரல் முடிவு) அன்று அல்லது அதற்கு முன்னதாக 11.00 மணிக்கு முன்னதாக (கேள்வி கோரல் முடிவு) அனுப்பிவைக்கவும். மேலே குறிப்பிடப்பட்ட கேள்வி மனு கோரல் முடிவுத் திகதிக்குப் பின்னர் வரும் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. கேள்வி மனுக்கள் கேள்வி மனு கோரலுக்கான இறுதி திகதி முடிவடைந்தவுடன் உடனடியாக மேலதிக பொது முகாமையாளர் (மின்கடத்தல் ) அலுவலகத்தில் மனுதாரர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்,
இலங்கை மின்சார சபை,

தலைவருக்காக,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு.

07- 63

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## *மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - மூதூர்*
## *வழக்குச் சான்றுப் பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை- 2021.07.10*

*மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ் குறிப்பிடப்படும் வழக்குச் சான்றுப் பொருட்கள் 2021.07.10 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*1. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ( ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கைகளை முன் வைத்தல் வேண்டும்.)*

*2. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட வழக்குச் சான்றுப் பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.*

*3. இவ் வழக்குச் சான்றுப் பொருட்கள் தொடர்பில் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் ஏலவிற்பனையிலிருந்து குறித்த பொருட்களை மீளப் பெறுவதற்கு இந் நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.*

*4. வழக்குச் சான்றுப் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தினைச் செலுத்தி அதனை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும். சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*5. வழக்குச் சான்றுப் பொருட்களை விலை கோரி வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.*

| *விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள்* | *அளவு* |
|---|---|
| *1. ஆற்று மணல்* | *105 கியூப்* |
| *2. இருவாட்டி மண்* | *03 கியூப்* |

*எச். எம். தஸ்னீம் பௌஸான்,*
*நீதிவான்/மாவட்ட நீதிபதி.*

*மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,*
*மூதூர்.*

*7- 39*

---

## *நீதிவான் நீதிமன்றம் - கல்முனை*

## *பறிமுதல் செய்யப்பட்ட மணலை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்*

*கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் ஆற்று மணல், வயல் மண் மற்றும் கிரவல் மண் ஆகியன எதிர்வரும் 2021.07.17 ஆந் திகதியன்று காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவருமிருப்பின் அன்றைய தினம் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக்கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.*

*2. பொது மக்கள் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.*

*3. இப் பொருட்கள் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந் நீதிமன்றிற்கு உரிமையுண்டு.*

*4. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக கொடுப்பனவைப் பணமாக மட்டும் செலுத்துவதுடன் உரிய பொருட்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தி விட வேண்டும்.*

5. பொருட்களை விலைக்கு வாங்குவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

| விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் | அளவு |
|---|---|
| 1. ஆற்று மணல் | 4 கியூப் |
| 2. வயல் மண் | 35 கியூப் |
| 3. கிறவல் | 03 கியூப் |

எம். எஸ். எம். சம்சுதீன்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை,
2021.06.23.

7- 40

---

## நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.07.10ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சி. ரிஸ்வான்,
நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

2021.06.28.

ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்கள் விபரம்

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 63377/E/20 | EP AAZ - 9998 | முச்சக்கர வண்டி | 01 |
| 2. | 48700/MT/17 | EP BBX - 5746 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்துக்கு மாத்திரம்) | 01 |
| 3. | 50772/E/18 | EP BDK - 6293 | மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகத்துக்கு மாத்திரம்) | 01 |
| 4. | 57309/PC/19 | EP BAQ - 1836 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | 61907/MT/20 | EP BFL - 8066 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 62154/MT/20 | EP HS - 8070 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | 62408/MT/20 | EP GX - 8347 | மோட்டார் சைக்கிள் | 01 |

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகன பதிவு இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 8. | 38983/PC/16 | | சிலண்டர் | 01 |
| 9. | 63455/S/21 | | சவள் | 01 |
| 10. | 63287/S/21 | | சவள் | 01 |
| 11. | 63288/S/21 | | சவள் | 01 |
| 12. | 63290/S/21 | | சவள் | 01 |
| 13. | 63415/S/21 | | சவள் | 01 |
| 14. | 63339/S/21 | | சவள் | 02 |
| 15. | 62481/S/21 | | சவள் | 01 |
| 16. | 63342/S/21 | | சவள் | 02 |
| 17. | AR/216/21 | | இரும்பு குழாய்கள் | 05 |

07-116

## ஆய விற்பனையும் குத்தகையும்

### லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் 2022 ஆம் ஆண்டுக்கான கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை

2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2022, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்ட லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவின் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 207 கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2021.08.25ஆந் திகதி மு.ப. 10.30 மணிவரையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இத்தால் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள ஏதாவதொரு பிரதேச செயலகத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதான குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரக் கட்டணத்தை செலுத்தி வருமான சான்றுப்பத்திரத்துடன் முகவரியிடப்பட்ட கடித உறையினுள் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள கள்ளுத் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திரப் படிவங்களை பூரணப்படுத்தும் போது கேள்விப் பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பமிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2021.08.25 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் லுணுகலை பிரதேச செயலகத்திற்கு சமுகம் தரல் வேண்டும்.

5. யாதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அனைத்து கேள்விப் பத்திரங்களையோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2021.09.28ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவானதாயிருத்தல் வேண்டும்.

7.ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் என பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி.ப.2.00 மணிக்கு முன்னதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாதக் கட்டணத்திற்கு கூடுதலான தொகையினைச் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை லுணுகலை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டீ.எம்.என்.திசாநாயக,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2021, யூன் 23 .

**அட்டவணை**

**2022 ஆம் வருடத்திற்காகவென அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகள்**

லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவு

**2022.01.01 தொடக்கம் 2022.12.31 வரை**

| தொடர் இல. | தவறணையின் பெயரும் முகவரியும் | பிரிவு | பி.செ.பிரிவில் தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படுகின்ற நேரம் | தவறணை மூடப்படுகின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் தினமும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | இல.02 லுணுகலை | லுணு கலை | லுணுகலை பிரதேச சபையின் வட்டார இலக்கம் 02 வரிப்பண இலக்கம் 219 கொண்ட குருவிக்கும்புர வத்த | மு.ப11.00 பி.ப. 05.00 | பி.ப. 02.00 பி.ப. 08.00 | ரூபா.5000.00 | 2021.08.25 மு.ப. 10.30 |

மஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச்சாலைக்கு 2022 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட முகாமையாளர் 2021.08.25 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கவாறு லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

7-64

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2021, மே மாதம் 01 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* கொன்ஸ்ட்ருவல் கெப்பிட்டல் (பிவிடி) எல்டிடி

*கம்பனி பதிவு இலக்கம்:* பீவீ 00238924

*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* 63/5, அம்பலன் வத்த வீதி, ஹீனட்டிகும்புர, 10120 , இலங்கை.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கொன்ஸ்ட்ருவல் கெப்பிட்டல் ,
கம்பனிச் செயலாளர்.

63/5, அம்பலன் வத்த வீதி,
ஹீனட்டிகும்புர, 10120 , இலங்கை.

7-93

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

எடோபிகோ ஒன்டாரியோஹ M 9W 3H 7, இல. 163, மர்கரி பாதை, கனடாவில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியன்சலாகே திலக்கசிறி ஏக்கநாயக்க ஆகிய நான், சுதர்சனவத்தை, கெந்தகொல்ல, மாவனகமவில் வசிக்கும் ஏக்கநாயக்க முதியன்சலாகே லஷந்த சமீர ஏக்கநாயக்கவிற்கு கடந்த 2019, பங்குனி மாதம் 14 ஆந் திகதியன்று சொத்துரிமை பத்திரத்தினை ஒப்படைத்து இருந்தேன். அதனை 2021, வைகாசி மாதம் 10 ஆந் திகதியன்று நான் மீண்டும் அவரிடம் இருந்து பெற்றுக் கொள்கிறேன். இதனை இலங்கை அரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

ஏக்கநாயக்க முதியன்சலாகே
திலக்கசிறி ஏக்கநாயக்க.

7- 41

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 11, செட்டியார் தெரு, இல. 247 என்னுமிடத்தில் வசித்து தற்போது கே. எம். என். என். வீடமைப்பு, செட்டியார் மாவத்தை, செம்பநூர், சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு இந்தியாவில் வசிக்கும் சாவன்னா நாச்சிஅப்பா குமாரப்பன் செட்டியார் (கடவுச்சீட்டு இல. L 4149011) ஆகிய நான், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு திருமதி அம்பகஹ ஹேவகே தொன் மஞ்சுளா தமயந்தியினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 272 மற்றும் 2009, திசெம்பர் 21 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களம் 8956 நாளேட்டின் 25 ஆம் தொகுதியின் 48 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தின் மூம் எனது அற்றோணி தத்துவக்காரராக, புத்தளம், மதுரங்குளி, பன்சல வீதி, இல. 176 எனுமிடத்தில் வசிக்கும் தே.அ.அ.இலக்கம் 603393791V சிரிமெதுரலாகே சந்ரசிறி என்பவரை நியமித்திருந்தேன். மேற்படி இல. 272 விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து செயலிழக்கச் செய்வதாக இத்தால் அறிவித்துக் கொள்வதுடன் மேலும் மேற்படி விசேட அற்றோணி தத்துவத்தில் எந்த செல்லுபடியாதலும் அல்லது சட்டரீதியான உறுதிப்பாடுகள் இல்லை எனவும் சகலருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

ரத்நாயக்க முதியன்சேலாகே குலசேன
சாவன்னா நாச்சிஅப்பா குமாரப்பன் செட்டியார்
என்பவரின் அற்றோணி தத்துவகாரரர்.

7- 42

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, ரஜமாவத்தை, இல. 9/8 (தற்போது தெஹிவளை, நெதிமால, பெல்லந்தர வீதி, இல. 14-2/1) எனும் முகவரியில் வசிக்கும் உபாலி ஸ்ரீ ஷாந்த குணசேகர (தே.அ.அ.இல. 590630284V) ஆகிய நான், ரத்மலான, ரஜ மாவத்தை, இல.9/8 எனும் முகவரியில் வசிக்கும் சிறிபால பரனவிதான (தே.அ. அ. இல. 194615200189) என்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். என். ப்ரீசன் பிரனாந்து என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1992.08.17ஆந் திகதி 1917ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவ பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

2021. 05.13. உபாலி ஸ்ரீ ஷாந்த குணசேகர.

7- 94

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| I ஆவது பகுதி : | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2021**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2021 |
| | | வெள்ளி | 09.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.06.2021 |
| | | வெள்ளி | 16.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.07.2021 |
| | | வியாழன் | 22.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2021 |
| | | வெள்ளி | 30.07.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2021 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 06.08.2021 | .. | நண்பகல் 12 | வியாழன் | 22.07.2021 |
| | | வெள்ளி | 13.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.07.2021 |
| | | வெள்ளி | 20.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.08.2021 |
| | | வெள்ளி | 27.08.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.08.2021 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2021 |
| | | வெள்ளி | 10.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2021 |
| | | வெள்ளி | 17.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2021 |
| | | வெள்ளி | 24.09.2021 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.09.2021 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.